நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.74/2020

அரசு தரப்புக்காக அ.சா.3 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிஷாந்த் | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W.4 | | | |

1 முதல் 3 எதிரிகள் ஆஜரில் இல்லை மனு தாக்கல் அனுமதிக்கப்பட்டது. இன்று அரசு தரப்பு சிறப்பு வழக்கறிஞர் ஆஜரில் இல்லை. அவர் நெடிய விடுப்பில் உள்ளார். அரசு தரப்பில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.காந்திமோகன் ஆஜரில் இருந்து இந்த வழக்கில் ஏற்கனவே விசாரிக்கப்பட்ட சாட்சியாக இருப்பதால் குறுக்கு விசாரணை தன் முன்னிலையில் செய்யலாம் என தெரிவித்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of May 2026.

*(ஏற்கனவே 12.06.2025 தேதியில் முதல் விசாரணை முடிக்கப்பட்ட சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சியிடம் முதல் விசாரணை வாக்குமூலம் படித்து பார்க்க கொடுக்கப்பட்டது. சாட்சி முழுவதுமாக படித்து பார்த்தார்.)*

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>– (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.37)

என்னை ஆய்வாளர் விசாரித்தார். என்றைக்கு விசாரித்தார் என்று

ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் சொன்னபடி "*முதல்நாள் இரவே மாப்பிள்ளையை பிடித்துவைத்துக்கொண்டார்கள்*" என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது தங்கை சபீனாவின் திருமணம் முடிந்து ஒரு வாரத்தில் நான் சிங்கப்பூர் சென்றுவிட்டேன் அதன் பிறகு என் தங்கை இறந்ததை கேள்விப்பட்டுதான் நான் திரும்பவும் ஊருக்கு வந்தேன் என்றால் சரிதான். முதல் விசாரணையில் சொன்ன எந்த விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். என் அம்மா சொல்லிதான் தெரியும். நான் சிங்கப்பூர் சென்ற பிறகு 10 நாட்கள் கழித்துதான் எனது அப்பா சிங்கப்பூர் வந்தார். எனது அப்பா திரும்பவும் என் தங்கை இறந்த பிறகுதான் ஊருக்கு வந்தார் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன தகவல்கள் குறித்து என் தங்கை சபீனாவிடமோ, அவரது கணவர் முதல் எதிரியிடமோ நான் எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு எனது தங்கை சபீனா பாண்டிச்சேரியில் B.Tech படித்துவந்தார். அந்த காலத்தில் என் தங்கைக்கும் சிங்காரத்தோப்பு கிராமத்தை சார்ந்த அமரன் என்பவருக்கும் பழக்கம் ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. சிங்கப்பூர் எனது அப்பா 20 வருடங்களாகவும் நான் 10 வருடங்களாகவும்

வேலை செய்து வந்தோம் என்றால் சரிதான். அதனால் எனக்கும் எனது அப்பாவிற்கும் இங்கு நடக்கும் எந்த விவரமும் நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். எனது தங்கை திருமணத்திற்கு முன்பே அமரன் என்பவரோடு பழகி காதலித்து இருவரும் திருமணம் செய்துகொள்ளலாம் என்று இருந்த நிலையில் எனது அம்மாவும் மற்றும் உறவினர்களும் அந்த திருமணம் நடக்காமல் தடுத்துவிட்டார்கள் என்றும் அதனால் எனது தங்கை மன வருத்தத்தில் இருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எங்கள் வீட்டில் யாருக்கும் இந்த விவரம் தெரியாது. எனது தங்கைக்கு, எனது தங்கையின் விருப்பத்திற்கு மாறாக முதல் எதிரியுடன் நாங்கள் திருமணம் செய்துவைத்தோம் என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கையும் முதல் எதிரியுடன் வாழபிடிக்காமல் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வந்துவிடுவார் என்று சொன்னால் சரியல்ல. முதல் எதிரி என் தங்கை மீது விவாகரத்து கேட்டு கடலூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த விவாகரத்து வழக்கில் எனது தங்கை பலமுறை நீதிமன்றத்தில் ஆஜரானது தெரியுமா என்றால் தெரியும். இந்த விவாகரத்து வழக்கு நிலுவையில் இருக்கும்போதுதான் எனது தற்கொலை செய்துகொண்டார் என்று சொன்னால் சரிதான். எதிரிகள் யாரும் எனது தங்கையை

கொடுமைபடுத்தவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிகள் யாரும் வரதட்சனை எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தங்கை அவரது விருப்பத்திற்கு மாறாக 1-ம் எதிரிக்கு நாங்கள் எல்லோரும் சேர்ந்து திருமணம் செய்துவைத்ததால் வாழப்பிடிக்காமல் எனது தங்கை தற்கொலை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னபடி எதிரிகள் எந்த தவறும் செய்யவில்லை என்றும் எதிரிகளுக்கும் என் தங்கை இறப்பிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.59)

2026 ஆம் ஆண்டு மே திங்கள் 20 ஆம் நாளன்று, 1969-ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)-இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/-G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.